ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் தொடர்பூட்டல் திணைக்களம்
திகதி 2023 சனவரி 04

# 2023 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகள்

சுதந்திரத்திற்குப் பின்னரான பொருளாதாரத்தில் மிகவும் சவால்மிக்க ஆண்டாக 2022ஆம் ஆண்டினை இலங்கை எதிர்கொண்டது. 2019இல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள், 2020இல் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பரவல் மற்றும் 2021இல் அதன்பின்னரான செயற்பாடுகள் மீதான அதன் நீடித்த தாக்கம், பாரியளவிலான சென்மதி நிலுவை அழுத்தங்களுக்கு மத்தியில் 2022இல் சமூக பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி என்பன உள்ளடங்கலாக அண்மைய ஆண்டுகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான பொருளாதார அதிர்வுகள் காரணமாக தோற்றம்பெற்ற சவால்கள் முன்னெப்பொழுதுமில்லாத கொள்கைச் சமநிலைப்படுத்தல்களுடன் இணைந்து, பொருளாதார நடவடிக்கைகளைக் கடுமையாகப் பாதித்து, தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபாரங்களுக்குக் கற்பனைசெய்ய முடியாதளவிலான இன்னல்களை ஏற்படுத்தின. வாழ்வாதாரங்கள் இழக்கப்பட்ட வேளையில் உண்மை வருமானங்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டன. இப்பொருளாதார அதிர்வுகளுடன் பின்னிப்பிணைக்கப்பட்ட பொருளாதாரத்தில் பல்வேறு துறைகளில் பல தசாப்தங்களாக நிலவிய கட்டமைப்புசார் பொருளாதாரத் தடைகள் பொருத்தமற்ற கொள்கைத் தெரிவுகளுடன் இணைந்து அதன்மூலம் பேரண்டப்பொருளாதார சமநிலையைத் தளர்த்தி தேசத்திற்கு சடுதியான மற்றும் பல்முனை கொண்ட பின்னடைவொன்றினைத் தோற்றுவித்தன.

பேரண்டப்பொருளாதார சமநிலையை மீட்டெடுக்கின்ற நோக்கில் 2022 காலப்பகுதியில் வேதனையளிக்கின்ற ஆயினும், தவிர்க்க முடியாத கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கமும் மத்திய வங்கியும் கட்டாயப்படுத்தப்பட்டன. பணவீக்க அழுத்தங்கள் மோசமடைவதனைத் தவிர்க்கும் வேளையில் குறுகிய காலத்திலிருந்து நடுத்தர காலத்திற்குள் ஏதேனும் பாதகமான பணவீக்க எதிர்பார்க்கைகளைத் தடுக்கும் பொருட்டு வட்டி வீதங்களில் முன்னெப்பொழுதுமில்லாத சீராக்கமொன்றினால் நாணயக்கொள்கை இறுக்கமாக்கப்பட்டது. மோசமான வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறைக்கு மத்தியில் தேர்ந்தெடுக்கப்பட்ட வெளிநாட்டுப் படுகடனின் தற்காலிக இடைநிறுத்தலொன்று அறிவிக்கப்பட்ட வேளையில், பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடொன்றிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற ஆதரவுடன் பொதுப் படுகடனை திரட்சிப்படுத்துவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. குறித்த சில படுகடன் பணிக்கொடுப்பனவுகளின் இடைநிறுத்தலின் காரணமாக தவிர்க்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சல்கள் நட்புநேய நாடுகள் மற்றும் பல்புடை மூலங்களிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களுடன் இணைந்து, துரிதமாக அதிகரித்துவருகின்ற சென்மதி நிலுவை அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கு உடனடியாக அவசியப்பட்ட தொழிற்பாட்டுசார் இடைவெளியை உருவாக்கத் துணைபுரிந்தன. இறக்குமதிகளின் முன்னுரிமைப்படுத்தல் உள்ளடங்கலாக ஏனைய பல்வேறு வழிமுறைகளினால் வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சல்கள் மேலும் கட்டுப்படுத்தப்பட்டன. ஏனையவற்றிற்கிடையில் எரிபொருள், நிலக்கரி, சமையல் எரிவாயு,

மருந்து மற்றும் உணவுப் பொருட்கள் என்பன உள்ளடங்கலாக அத்தியாவசிய இறக்குமதிகளுக்கான வெளிநாட்டுச் செலாவணியின் கிடைப்பனவை நிச்சயப்படுத்தியதன் மூலம் இவ்வழிமுறைகள் சமூகப் பொருளாதார அமைதியின்மையினைப் பெருமளவு குறைத்தன. அதேவேளை, 2022இன் முற்பகுதியில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க மிதமிஞ்சிய பெறுமானத்தேய்வினைத் தொடர்ந்து, சந்தைப் பங்கேற்பாளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனைச் செய்முறையொன்றின் மூலம் வெளிநாட்டுச் செலாவணி உறுதிப்பாடானது மீட்டெடுக்கப்பட்டது. வெளிநாட்டுச் செலாவணியின் மீளனுப்பல் மற்றும் மாற்றுதல் ஆகிய தேவைப்பாடுகளுடன் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையினை மேம்படுத்தும் பொருட்டு மேலதிக வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டதன் மூலம் உத்தியோகபூர்வமற்ற சந்தையில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் ஊக்கமிழக்கச் செய்யப்பட்டன. அதேவேளை, நிதியியல் முறைமையில் உறுதிப்பாட்டினைப் பாதுகாக்கும் பொருட்டு வழிமுறைகளின் அணிவரிசையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டதன் மூலம் ஒட்டுமொத்த சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பின் மீதான ஏதேனும் பாரிய செயல் விளைவுகள் தவிர்க்கப்பட்டன. மேலும், பொருளாதாரத்தின் நீடித்துநிலைத்திருக்கின்ற மீட்சியொன்றினை நிச்சயப்படுத்துவதில் இன்றியமையாதனவாக விளங்குகின்ற இறைத் தொழிற்பாடுகள் மற்றும் பொருளாதாரத்தின் ஏனைய துறைகளில் காணப்படுகின்ற கட்டமைப்புசார் குறைபாடுகளைத் திருத்துவதற்காக காலம் கடந்த சீராக்கங்களை அரசாங்கம் முன்னெடுக்கத் தொடங்கியுள்ளது.

குறுங்கால பொருளாதார உறுதிப்பாட்டு வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தலுக்கு இணையாக, பன்னாட்டு நாணய நிதியத்துடனான விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடொன்றிற்கான பேச்சுவார்த்தைகள் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டு 2022 செத்தெம்பரில் அலுவலர் மட்ட உடன்படிக்கையொன்று எட்டப்பட்டது. அதேவேளை, நடுத்தர கால பொதுப் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும்தன்மையினை நிச்சயப்படுத்துவதனை நோக்காகக் கொண்டு படுகடன் மறுசீரமைத்தல் செய்முறைக்காக உத்தியோகபூர்வ கொடுகடனாளர்களிடமிருந்தான நிதியிடல் உத்தரவாதத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இலங்கைக் கொடுகடனாளர்களுடனான இடைத்தொடர்பு தொடர்பில் தற்போது குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதுடன், எதிர்பார்க்கப்படுகின்ற பன்னாட்டு நாணய நிதிய வசதியானது 2023இன் முற்பகுதியில் பொருண்மியமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுவரையிலான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட குறுங்கால பொருளாதார உறுதிப்பாட்டு வழிமுறைகள் முன்னெப்பொழுதுமில்லாதவையாகும். இவ்விடர்பாடுமிக்க காலப்பகுதிகளில் தனிப்பட்டவர்களினாலும் வியாபாரங்களினாலும் மேற்கொள்ளப்பட்ட தியாகமானது பொருளாதார உறுதிப்பாடு நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்திற்கு மீட்டெடுக்கப்படும் பட்சத்தில் மாத்திரமே அர்த்தமுள்ளதாயமையும். இவ்விலக்கை நோக்கி நகரும் போது, பொருளாதாரமானது நீடித்துநிலைத்திருக்கின்ற மீட்சியொன்றினை உருவாக்குவதனை நிச்சயப்படுத்தும் பொருட்டு சமூகத்தின் சகல தரப்பினரிடமிருந்தும் கூட்டான மற்றும் ஒருங்கிணைந்த முயற்சிகள் அவசியப்படுகின்றன.

2023இற்கும் அதற்கப்பாலான காலப்பகுதியிலும் பொருளாதாரத்திற்கான தோற்றப்பாடு மற்றும் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினை மீளப்பெறுவதற்கான மத்திய வங்கியின் நாணயச் சபையின் முக்கிய அபிலாசைகள் என்பன கீழே தரப்பட்டுள்ளன:

**பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி**

i. *2022 முற்பகுதியிலிருந்து ஆரம்பித்த பணவீக்கத்தின் துரித விரைவுபடுத்தலானது 2022 ஒத்தோபரில் திரும்பலடைந்து ஏனையவற்றிற்கிடையில் உலகளாவிய விலை அழுத்தங்களை ஒப்பீட்டளவில் தளர்த்துவதுடன் இணைந்து பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட இறுக்கமான நாணயக்கொள்கை வழிமுறைகள், இறைத்திரட்சி முயற்சிகள் மற்றும் அரசாங்கத்தின் நிரம்பல் பக்க கொள்கைகள் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டன.*

ii. *முதன்மைப் பணவீக்கமானது 2023இன் முதலரைப் பகுதியில் குறைவடைதலொன்றுடன் பணவீக்க வீழ்ச்சிப் பாதையொன்றில் நகருமெனவும் 2023இன் இறுதிப்பகுதியில் பணவீக்கத்தின் விரும்பத்தக்க மட்டங்களை அடையுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்வரும் காலத்தில் பணவீக்கத்திற்கான ஏதேனும் மேல்நோக்கிய இடர்நேர்வுகள் தோற்றம் பெற்றால் அவை பொருத்தமான கொள்கை வழிமுறைகளின் மூலம் எதிர்கொள்ளப்படும்.*

iii. *பணவீக்க எதிர்பார்க்கைகள் எறிவுசெய்யப்பட்ட பணவீக்க வீழ்ச்சிப் பாதையில் தொடர்ந்தும் நன்கு நிலைநிறுத்தப்பட்டுள்ளன.*

iv. *2022இல் ஏறத்தாழ 8.0 சதவீத உண்மைச் சுருக்கமொன்றினைப் பதிவுசெய்யுமென எறிவுசெய்யப்பட்டுள்ள இலங்கைப் பொருளாதாரமானது 2023இன் இரண்டாம் அரையாண்டிலிருந்து படிப்படியானதொரு மீட்சியினைப் பதிவுசெய்யுமெனவும் அதற்கப்பாலான காலப்பகுதியில் வளர்ச்சி உத்வேகத்தினை நீடித்துநிலைத்திருக்கச் செய்யுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.*

**நாணயக்கொள்கை மற்றும் வட்டி வீதங்கள்**

i. *நாணயக்கொள்கையானது நடுத்தர காலத்தில் விலை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதில் தொடர்ந்தும் முனைப்புடன் காணப்படும்.*

ii. *எதிர்வரவுள்ள மத்திய வங்கித்தொழில் சட்டமானது, இதன் வரைவு ஏற்கனவே அமைச்சரவையினால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது, மத்திய வங்கியின் சுயாதீனத்தையும் பொறுப்புக்கூறும் தன்மையினையும் மேலும் வலுப்படுத்துவதன் மூலம் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பினுள் விலை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துகின்ற அதன் மையக் குறிக்கோளினை மீள்வலியுறுத்துகின்றது.*

iii. *மத்திய வங்கியானது பொருளாதாரத்தின் தோற்றப்பாடு தொடர்பில் மக்களுக்கு சிறந்த முறையில் அறிவிக்கும் பொருட்டு முன்னோக்கிய பார்வையிலமைந்த நாணயக்கொள்கை அறிக்கையொன்றினை வெளியிடத் தொடங்குவதன் மூலம் நாணயக்கொள்கைச் செயற்பாடுகளின் வெளிப்படைத்தன்மையினை மேலும் மேம்படுத்தும்.*

iv. *பணச் சந்தைத் திரவத்தன்மை நிலைமைகள் மேம்படுவதனாலும் படுகடன் மறுசீரமைப்புசார் கரிசனைகளுடன் இணைக்கப்பட்ட இடர்நேர்வு மிகையின் தீவிரத்தன்மை குறைவடைவதனாலும் தற்போது அவதானிக்கப்படுகின்ற விஞ்சியளவிலான உயர் மட்டங்களைக் கொண்ட வட்டி வீதங்கள் எதிர்வருகின்ற காலப்பகுதியில் மிதமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.*

v. *குறுங்கால பணவீக்கத் தோற்றப்பாட்டினால் வழிகாட்டப்பட்டவாறு, சந்தை வட்டி வீதங்கள் கீழ் நோக்கிச் சீர்செய்யப்படலாம். எனினும் பணவீக்க அழுத்தங்கள் போதியளவு கட்டுப்படுத்தப்படுவதற்கு நியாயமானளவு இறுக்கமான நாணய நிலைமைகள் பேணப்படும்.*

*vi.* *அதிகரித்துவரும் வைப்புக்களுக்கு உயர் வட்டி வீதங்களை வழங்குகின்ற ஆரோக்கியமற்ற போட்டித்தன்மையானது கடன் வழங்கல் வீதங்கள் உள்ளடங்கலாக அனைத்துச் சந்தை வட்டி வீதங்களில் விஞ்சியளவிலான சீராக்கங்களுக்கு வழிவகுத்து, கொள்கை வட்டி வீதங்களின் சீராக்கத்திற்கு அதிகமாக உயர்வடைந்து சென்றுள்ளமையினால் இதனைத் தவிர்க்குமாறு வங்கித்தொழில் மற்றும் வங்கியல்லாத் தொழில் துறை நிறுவனங்களிடம் மத்திய வங்கி ஏற்கனவே கோரியுள்ளது. மேம்பாடடைந்து வரும் சந்தைத் திரவத்தன்மை நிலமைகளுடன் இணைந்து சந்தை வட்டி வீதக் கட்டமைப்பு (வைப்பு மற்றும் கடன்வழங்கல் வட்டி வீதங்கள்) எதிர்வரும் காலப்பகுதியில் மிதமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய திருத்தங்கள் எதிர்பார்க்கப்பட்டதைப் பார்க்க அதிக காலத்தினை எடுக்குமானால் பொருத்தமான வகையில் நிருவகிக்கப்படுகின்ற வழிமுறைகளினை மத்திய வங்கி கருத்திற்கொள்ளும்.*

*vii.* *போட்டித்தன்மையினைப் பேணுவதற்குத் துணைபுரிகின்ற நடுத்தர காலத்திலிருந்தான நீண்ட கால சமநிலை மட்டங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் செலாவணி வீத நிர்ணயிப்பில் மேலும் நெகிழ்ச்சித்தன்மையானது மீள்நிலைநிறுத்தப்படும்.*

**நிதியியல் துறை**

*i.* *நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்தலும் மத்திய வங்கியின் மறுசீரமைப்பு மற்றும் உறுதிப்பாட்டுத் திட்டத்தில் தொடர்ந்தும் முன்னணியில் காணப்படுகின்றது.*

*ii.* *நிதியியல் துறையின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினை மேம்படுத்தும் பொருட்டு வங்கித்தொழில் நிறுவனங்களின் காசுப்பாய்ச்சல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான திரவத்தன்மை ஆதரவினை மத்திய வங்கி நிச்சயப்படுத்துகின்றது.*

*iii.* *வங்கிகள் போதியளவில் மூலதனமாக்கப்படுவதனை நிச்சயப்படுத்துவதற்கும், அவற்றின் தீர்மானக் கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கும், வைப்பாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கும், மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தல் அதிகாரங்களை வலுப்படுத்துவதற்கும் தேவையான சட்டக் கட்டமைப்பினை முன்மொழியப்பட்ட வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.*

*iv.* *தோற்றம் பெற்றுவரும் இடர்நேர்வுகளைத் தாங்கும் வகையில் வங்கித்தொழில் துறையின் மூலதன மற்றும் திரவத்தன்மை மட்டங்களைப் பாதுகாக்கும் பொருட்டு தற்போதுள்ள மூலதன மற்றும் திரவத்தன்மை என்பவற்றுடன் தொடர்புடைய ஒழுங்குவிதிகள் மீளாய்வு செய்யப்படும். மேலும், தனிநபர் கடன்பெறும் எல்லை தொடர்பான வரையறைகள் மீதான தற்போதைய விதிமுறையும் அரசாங்கம் மற்றும் வங்கிகளுக்கிடையிலான இணைப்பினைக் குறைக்கும் பொருட்டு மீளாய்வு செய்யப்படும்.*

*v.* *வங்கித்தொழில் மற்றும் வங்கியல்லாத் தொழில் நிதியியல் துறைகள் ஆகிய இரண்டிலுமுள்ள நிதியியல் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பானது அளவு, இடைத்தொடர்பு மற்றும் வினைத்திறன் ஆகியவற்றின் பொருளாதார நன்மையுடன் மூலதனத்தை மேம்படுத்தும் பொருட்டு முன்னெடுக்கப்படும் /வசதிப்படுத்தப்படும் வேளையில் அந்நிறுவனங்களின் நிதியியல் வலிமை, தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மை மற்றும் ஒட்டுமொத்த உறுதிப்பாடு மற்றும் எதிர்வரும் காலப்பகுதியில் வியாபாரச் சமூகத்தின் வளர்ந்து வருகின்ற கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கான அவற்றின் இயலளவு என்பவற்றை மேம்படுத்தும்.*

*vi.* *2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம் மற்றும் 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டம் என்பவற்றிற்கான திருத்தங்கள் சந்தை அபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் வங்கியல்லாத நிதியியல் துறையின் உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்தும் நோக்கில் அறிமுகப்படுத்தப்படும். மேலும், முன்மொழியப்பட்ட நுண்பாக மற்றும் கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைச் சட்டமானது ஒட்டுமொத்த வங்கியல்லாத் தொழில் துறை வாடிக்கையாளர்களின் சந்தை நடத்தை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு என்பவற்றை மேம்படுத்தும். மேலும், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத பணக்கடன் வழங்குபவர்களை ஒழுங்குமுறைப்படுத்தல் வரம்பிற்குள் கொண்டு வருவதற்கான வழிமுறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.*

**வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்**

*i.* *2022இல் அறிமுகப்படுத்தப்பட்ட எல்லைகளுக்கிடையிலான மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களைக் கண்காணிக்கின்ற முறைமையானது (அதாவது, பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை) வெளிநாட்டுத் துறையில் தரவு உள்ளடக்கத்தினை மேம்படுத்துவதற்கும், ஒழுங்குமுறைப்படுத்தல் கண்காணிப்பினை மேம்படுத்துவதற்கும், தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கு ஆதரவளிப்பதற்கும் மேலும் வினைத்திறனாகப் பயன்படுத்தப்படும்.*

*ii.* *குறித்த சில இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு விதிக்கப்பட்ட கேள்வி முகாமைத்துவ வழிமுறைகள் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை மற்றும் நாணய நிலைமைகளுக்கு எதிராக மதிப்பீடு செய்யப்படும்.*

மத்திய வங்கி மற்றும் அரசாங்கம் ஆகிய இரண்டினாலும் அடையாளம் காணப்பட்ட குறுங்கால உறுதிப்பாட்டு வழிமுறைகள் மற்றும் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்திற்கான கட்டமைப்புசார் சீர்திருத்தங்கள் வினைத்திறனான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதானது நீடித்துநிலைத்திருக்கின்ற அடிப்படையில் மீண்டெழுவதற்கான விரைவானதொரு பாதையில் இலங்கை நகர்வதற்கு இன்றியமையாததாகின்றது. இருப்பினும், நெருக்கடிமிக்கதொரு காலப்பகுதியில் பேரண்டப்பொருளாதாரக் கொள்கைகளையும் மீட்பு உபாயங்களையும் உருவாக்குவதானது பாரியளவிலான நிச்சயமற்றதன்மைகளால் சூழப்பட்டுள்ளது. இது புதிய தகவல்கள் கிடைக்கப்பெறும் போது கொள்கைகள் மற்றும் உபாயங்கள் என்பவற்றிற்கான காலந்தவறாத சீராக்கங்களைத் தேவைப்படுத்துகின்றது.

**பொருத்தமான கொள்கை வழிமுறைகளினூடாக அதன் ஆணையினை அடைவதற்கு மத்திய வங்கி தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் வேளையில் திருத்தக் கொள்கை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள் என்பவற்றை மேற்கொள்ளும் பொருட்டு அபிவிருத்திகளை உன்னிப்பாக அவதானிக்கும். இலங்கையின் சமூகப் பொருளாதார வரலாற்றின் இம்முக்கியமான தருணத்தில் நிதியியல் துறை பங்கேற்பாளர்கள், வர்த்தக சமூகம் மற்றும் பொதுமக்களின் அசைக்க முடியாத ஆதரவு, ஒத்துழைப்பு மற்றும் தியாகத்தை மத்திய வங்கி மெச்சுவதுடன் ஒன்றிணைந்த முயற்சியினூடாக நெருக்கடியிலிருந்து மீளும் வரை தொடர்ந்தும் முனைப்புடனிருப்பதற்கான வலுவான அர்ப்பணிப்பின் தேவைப்பாட்டினை மீள்வலியுறுத்துகின்றது.**